இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 163 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 10 – வியாழக்கிழமை 23 ஜனவரி 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 163 : Thiruvalluvar Year - 2056 - Thai 10 - Thursday 23 January 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. உருவாக்கி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு வழங்கிய ‘திருமதி லக்ஷ்மி வளர் தமிழ் நூலகம்!’






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.1.2025) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் அவர்களின் சொந்த நிதியிலிருந்து 12 கோடி ரூபாய் செலவில் அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகத்தை திறந்து வைத்தார். இந்த விழாவில், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழரசி, எஸ்.மாங்குடி, டாக்டர் வி.முத்துராஜா, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கவிப்பேரரசு வைரமுத்து, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித், அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் க.ரவி மற்றும் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## குறள்நெறி பின்பற்றப்பட்டால் தான் தமிழ்நாடு காப்பாற்றப்படும்!

# வள்ளுவர் நெறியே வாழ்வியல் நெறியாக மாற வேண்டும்!

## காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் ‘திருமதி லக்ஷ்மி வளர் தமிழ் நூலகம்’ –

## திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**காரைக்குடி, ஜன. 23 -**

**காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் ‘திருமதி லக்ஷ்மி வளர் தமிழ் நூலகம்’, அய்யன் திருவள்ளுவர் சிலை ஆகியவற்றை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது “குறள் நெறி பின்பற்றப்பட்டால்தான் தமிழ்நாடு காப்பாற்றப்படும்; உலகமும் காப்பாற்றப்படும்” என்று கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.1.2025) காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் மற்றும் அய்யன் திருவள்ளுவர் திருவுருவச்சிலை திறப்பு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

இந்த இனிய நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

ஒளி மிகுந்த முகங்களோடு அமர்ந்த நீங்கள், இப்போது பசி மிகுந்த முகங்களோடு அமர்ந்திருக்கும் நிலையில், உங்கள் முகங்கள் மட்டுமல்ல, எங்கள் முகங்களும் சேர்த்துதான் நான் சொல்கிறேன். ஆகவே, நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளாமல் சுருக்கமாக என்னுடைய உரையை நான் அமைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

வள்ளல் அழகப்பர் வாழ்ந்த மண்ணிற்கு வந்திருப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். வள்ளல் அழகப்பர் பெயரிலான பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறும் இந்த அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா மற்றும் திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் திறப்பு விழா ஆகிய அறிவுசார் விழாக்களில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்னும் சொல்லப்போனால் என்னுடைய மகிழ்ச்சி இரண்டு மடங்காகிறது!

வழக்கறிஞர் – தொழிலதிபர் என்ற அடையாளங்களைக் கடந்து, வள்ளல் அழகப்பர் அவர்கள், ஒரு பெருமைக்குக் காரணமாக வாழ்ந்திருக்கிறார். கல்விக்காக அவர் செய்திருக்கும் தொண்டுதான் மிகமிக முக்கியமான





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.1.2025) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், அய்யன் திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்த போது எடுத்த படம்!

தொண்டாக அமைந்திருக்கிறது! இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள், வள்ளல் அழகப்பர் அவர்களை குறிப்பிட்டு சொல்லும்போது, சோசலிச முதலாளி என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்!

### உயர்ந்த உள்ளத்துக்குச் சொந்தக்காரர் அழகப்பர்!

இந்தியா விடுதலை அடைந்தபோது, சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த லட்சுமணசாமி முதலியார் அவர்கள், “அறியாமையிலிருந்து மக்கள் விடுதலை அடையவேண்டும் என்றால், பின்தங்கிய பகுதிகளில் செல்வந்தர்கள் கல்லூரிகளைத் தொடங்க வேண்டும்” என்று கோரிக்கை வைத்தார். உடனே அந்த மேடையில் இருந்த வள்ளல் அழகப்பர் அவர்கள், ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்து, நான் தொடங்கத் தயார் என்று உயர்ந்த உள்ளத்துக்குச் சொந்தக்காரராக அன்று அவர் எடுத்துக்காட்டினார்.

கல்வித் தொண்டையும் தமிழ்த்தொண்டையும் சேர்த்து ஆற்றிய அவரால்தான், இன்றைக்குப் பலரும் பட்டங்கள் பெற்று, உலகம் முழுவதும் உயர்ந்து இருக்கிறார்கள். சுருக்கமாக சொல்லவேண்டும் என்றால், தமிழரின் ஈகை பண்புக்கு அடையாளமாக வாழ்ந்தவர்தான் வள்ளல் அழகப்பர் அவர்கள்!

அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த வள்ளல் அழகப்பரின் பெயரில் அமைந்திருக்கும் இந்த பல்கலைக்கழகத்தில் அய்யன் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்ததில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன்.

வான்புகழ் வள்ளுவருக்கு குமரியில் தலைவர் கலைஞர் அவர்கள் சிலையை அமைத்த பேரறிவுச் சிலையின் வெள்ளி விழா கொண்டாடப்படும் இந்தத் தருணத்தில், இந்தச் சிலையைத் திறந்து வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். வள்ளுவர் நெறியே வாழ்வியல் நெறியாக மாறவேண்டும் என்று நாம் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறோம்! குறள் நெறி பின்பற்றப்பட்டால் தான், தமிழ்நாடும் காப்பாற்றப்படும்; உலகமும் காப்பாற்றப்படும்! அப்படி காப்பாற்றப்பட வேண்டும் என்றால், வள்ளுவரை யாரும் கபளீகரம் செய்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்! வள்ளுவர், வள்ளலார் போன்ற தமிழ் மண்ணில் சமத்துவத்தை பேசிய மாமனிதர்களை களவாட ஒரு கூட்டமே இன்றைக்கு சதி செய்துக்கொண்டிருக்கிறது. அதற்கு எதிரான காவல் அரணாக ஒவ்வொரு தமிழரும் இருக்கவேண்டும்!

அடுத்து, திராவிட இயக்கத்தின் வீறுமிக்க கவிஞர் பாவேந்தர் பரம்பரைக் கவிஞர், கவியரசு முடியரசனார் அவருடைய பெயரை இந்த அரங்கத்திற்கு உங்கள் முன்னால் நாம் சூட்டியிருக்கிறோம். ‘திராவிட இயக்கத்தின் பகுத்தறிவுக் கவிஞர்’ என்று தந்தை பெரியாரால் போற்றப்பட்டவர் முடியரசன் அவர்கள். தலைவர் கலைஞரின் நெஞ்சுக்கு நெருக்கமான கவிதைத் தோழர் அவர். அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலக்கிய அணித் தலைவராக செயல்பட்டு கன்னித்தமிழ் வளர்த்தவர்! அவரது பெயரை சூட்டியதற்கு நான் உள்ளபடியே பெருமைப் படுகிறேன்.

### ப.சிதம்பரம் அவர்களே ஒரு நடமாடும் நூலகம்!

அடுத்து, ‘அறிவுதான் நம்மைக் காக்கும் கருவி’ என்று வள்ளுவர் கூறியதற்கு அடையாளமாக, நம்முடைய மரியாதைக்குரிய மேனாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள், தன்னுடைய அன்னையார் திருமதி லக்ஷ்மி அவர்களது பெயரால், வளர்தமிழ் நூலகத்தை அமைத்திருக்கிறார்.

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

## ப.சிதம்பரத்தின் பார்வையும் பாராட்டும் எனக்கு பெரிய உற்சாகத்தைக் கொடுக்கும்!



**மரியாதைக்குரிய ப.சிதம்பரம் அவர்களைப் பொருத்தவரைக்கும், அவரே ஒரு நடமாடும் நூலகம்தான்! அரசியல், வரலாறு, சட்டம், பொருளாதாரம், இலக்கியம் என்று எல்லா துறையிலும் ஆழமான அறிவு கொண்ட, அறிவுக் கருவூலம்தான் ப.சிதம்பரம் அவர்கள். நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு திட்டம் குறித்தும், நம்முடைய ப.சிதம்பரம் அவர்கள் என்ன சொல்கிறார் என்று தெரிந்துகொள்வதில் நான் ஆர்வமாக இருப்பேன். ஏன் என்றால், அவரின் பார்வையும் அவரின் பாராட்டும் எனக்குத் தனிப்பட்ட முறையில் ஒரு பெரிய உற்சாகத்தைக் கொடுக்கும்!**